Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 40—No. 5

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க வைகாசி 1967 மே | இதழ் 5

உள்ளுறை	பக்கம்
சிவப்பிரகாச உரை	... 105
கடைமுடி (கீழூர்)	... 109
அம்பலவாணர் அருள்	... 112
பழியோரிடம் பாவமோரிடம்	... 119
வா. தி. மாசிலாமணி முதலியார் மறைவு	... 122
சமயப்புரவலர் இருவர் மறைவு	... 123
திருவெம்பாவை	... 126
மதிப்புரை	... 135

பத்திராசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

28-5-'67 ஞாயிறன்று காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரி பார்த்தல். ஆண்டு விழா முதலிய பொருள் கள் பற்றி முடிவுகள் தீர்மானிக்கப் பெறும். உறுப்பினர் கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். —செயலாளர்

நம் சமாஜத் தலைவர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முதற் சமயக் கட்டளையின்படி 23-4-67 ஞாயிறன்று மாலை 6-30 மணிக்குத் திருமயிலை கபாலீச் சுரத்தில் "திருக்கோயில்" ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்கள் 'உமா பதி சிவம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

மலேயா வாழ் பேரன்பர் திரு சிவநேசன் அவர்கள் நம் சமாஜக் கட்டட நிதிக்கென (ரூ 1000/—) ரூபாய் ஓராயிரத்தை நன்கொடையாக உதவியுள்ளார்கள். அவர்களுக்கு நம் நன்றி உரித்தாகுக. இப் பேரன்பரைப் போன்று தக்கார் பலரும் முயன்றால் சமாஜக் கட்டிடம் விரைவில் எழும்புவதில் வியப்பில்லையன்றோ? இறைவ னருளோடன்றிப் பணமிருப்பவர்களுக்கு நன்கொடை கொடுத்து இத்திருத்தொண்டில் ஈடுபட மனமும் வேண் டும். அதற்கும் அவனருளே வழி கோலி நம் சமாஜப் பணியைச் சிறக்கச் செய்வதாகுக.

வைகாசி மாத விசேட தினங்கள்

9	(23-5-67)	திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் விழா
11	(25-5-67)	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விழா
,,	,,	முருக நாயனார் விழா
,,	,,	திருநீலநக்க நாயனார் விழா
,,	,,	திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் விழா
15	(29-5-67)	பாம்பன் குமர குருதாச சுவாமிகள் விழா
22	(5-6-67)	கழற்சிங்க நாயனார் விழா
28	(11-6-67)	நமி நந்தியடிகள் நாயனார் விழா
,,	,,	சேக்கிழார் விழா
29	(12-6-67)	சோமாசிமாற நாயனார் விழா

Reg M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40	பிலவங்க வைகாசி 1967 மே	இதழ் 5

மதுரை ஞானப்பிரகாசர் எழுதிய

சிவப்பிரகாச உரை

(ஆசிரியர்)

ஞானப்பிரகாசர் என்ற பெயரில் அநேக சிவஞானிகளும் நூலாசிரியர்களும் வாழ்ந்து இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கி. பி. 13–16 நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களே. இவர்களுள் மிகவும் சிறப்புடைய ஒருவர் மதுரை ஞானப்பிரகாசர் என்பவர். இவர் சிவப்பிரகாசத்திற்கு உரையெழுதி யிருக்கிறார். இதுபற்றியே இவரை நாம் இங்குக் கருதுகிறோம். இவர் செய்த ஓர் உரை உண்டு என்பதை, மதுரைச் சிவப்பிரகாசர் முதன் முதலில் குறிப்பிடுகிறார். "இந்தச் சிவப்பிரகாசமாகிய நூலுக்கு முன்னோர்களும் வியாக்கி செய்திருக்க, இப்பொழுது இந்த வியாக்கி செய்ய வேண்டுங் காரணமேதென்னில், முன்னுள்ள தம்பிரான்கள் எழுதின வியாக்கிகளெல்லாம் பொழிப்புரையாக எழுத, அதனோடு சமயிகள் கருத்துக்களுங் காட்டி என் தம்பிரான் ஞானப்பிரகாசத் தம்பிரானார் எழுதின வியாக்கியின் வழியே தொந்தனையும் பாட்டுஞ் சேர்த்து வியாக்கி செய்ததென அறிக",

மதுரை ஞானப்பிரகாசர் எழுதிய இந்த உரை யாரும் இதுவரை பார்த்ததில்லை வேலம்பாளையம் திரு ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்கள் தம்மிடம் இவ்வுரை இருப்பதாகச் சொல்லி உரையை உதவினார்கள். இது மிகவும் பழமையான காகிதப் பிரதி. இதில் 87 ஏடுகள் உள்ளன. (174 பக்கம்) பழைய காலத்து அன்னபேதி மையினால் அழகாகப் புத்தகம் போல ஏட்டின் இருபுறமும் எழுதப்பட்டுள்ளது. பக்கத் தலைப்பில் அதில் தொடங்குகின்ற பாட்டின் முதல் குறிப்பு உள்ளது. எழுத்துக்கள் ஏட்டில் உள்ளவாறே புள்ளி, குறில்-நெடில் பேதம் முதலியன எதுவுமின்றி, செய்யுள் வரையறை, சீர் வரையறை, மூலம் உரை வேறுபாடு எதுவும் காணப்படாமல் எழுதப்பட்டுள்ளது ஏடெழுதிப் பழக்கமுள்ளவரே இதை எழுதியிருக்கிறார். முற்றுப் புள்ளிக்குப் பதிலாக ஏடு போலச் சுழியே போடப்பட்டுள்ளது. நூல் இறுதியில் "தட்சிணாமூர்த்தி திருவடித் தாமரைகளே துணை" விக்ருதி வருஷம் மாசி மாதம் 18 ஆம் தேதி சிவப்பிரகாசம் எழுதி நிறைந்தது முற்றும். திருச்சிற்றம்பலம், காருண்ய குருபாதமே துணை" என்று எழுதப்பட்டுள்ள குறிப்புக் கொண்டு, இது எழுதப்பட்ட வருஷம் கி. பி. 1830 என்று அறிகிறோம்.

இந்த ஏட்டில் மதுரை ஞானப்பிரகாசர் பெயர் காணப்படவில்லை. ஆயினும் இவ்வுரைக்கும் சிவப்பிரகாசர் உரைக்கும் உள்ள ஒற்றுமைகளையும், இதிலிருந்து சில தொடர்களைச் சிவப்பிரகாசர் அப்படியே எடுத்து ஆளுவதையும் கூர்ந்து கவனிக்கும் போது, இது மதுரை ஞானப்பிரகாசர் உரை என்று திட்டமாய்ச் சொல்ல முடிகிறது. ஆனால் இவ்வுரை வேறு; சிவப்பிரகாசர் முற்றிலும் வேறாகவே உரை எழுதியிருக்கிறார்.

நான்கு வகைச் சத்திநிபாதம், முத்திபேதங்கள் முதலியன கூறுமிடத்தில், இவர் மிகவும் சிறப்பாக உரையெழுதியிருப்பதைக் காண்கிறோம். மேலும் முத்திபேதங்களைக் கூறும் 'அரிவையர் இன்புறும் முத்தி' என்ற பாடலின் உரையில், 'இவற்றின் வரவைப் பரபக்கத்தின்

வியாக்கியிலே கண்டு கொள்க' என்று எழுதுகிறுர். இதனுல் இவர் சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு வியாக்கியானம் எழுதியிருக்கிறுர் என்று கருதத் தோன்றுகிறது.

இவரைப் பற்றிய ஒரு குறிப்பு வேறிடமிருந்து கிடைக்கிறது. சத்திய ஞான பண்டாரம் பிள்ளைத் தமிழ் என்ற நூலில் ஒரு பாடல் இவரைக் குறிப்பிடுகிறது:

கண்ணிற் சிறக்கும்ஆகமம்உணர்ந்தினியதச
காரியம் தமிழினிற்செய்
களந்தைவரு ஞானப்பிர காசன்உல கத்தவர்கள்
கருதருசி வப்பிரகாசம்
பண்ணிற்சி றக்குமுரை எழுதும்அன் பூர்அவனி
பரவுஞா னப்ரகாசன்
பகரரிய இருவரும் தலைவணங் கக்கருணை
பாலிக்கும் ஒருகுரவனே.

என்ற வருகைப் பருவப் பாடலால், நாம் பெறுவது "சத்திய ஞானப் பண்டாரம் ஒருவர் இருந்தார்; அவரிடம் ஞானப் பிரகாசர் இருவர் உபதேசம் பெற்றுர்கள்; ஒருவர் ஆகமம் உணர்ந்து தசகாரியம் தமிழில் செய்த களந்தை ஞானப்பிரகாசர், மற்றவர் சிவப்பிரகாசத்துக்குச் சிறந்த உரை எழுதிய அன்பூர் அவனி பரவு ஞானப் பிரகாசர்' என்பதாகும். இவ்விருவருள், சிவப்பிரகாச உரையெழுதிய ஞானப் பிரகாசர் மதுரை ஞானப்பிரகாசர் ஆவார். அன்பூர் என்பது அன்பு பொருந்திய என்று பொருள் படலாம்; அல்லது அன்பூர் என்ற ஊராகவும் இருக்கலாம். அங்ஙனமாயின், இவர் அன்பூரில் பிறந்தவர். திருவாரூரில் பிரசித்தமாக வாழ்ந்து சத்திய ஞானப் பண்டாரத்திடம் உபதேசம் பெற்றுர். பின்னர் மதுரையில் சென்று பிரசித்தமாய் வாழ்ந்து அங்கு மதுரைச் சிவப்பிரகாசருக்கு உபதேசம் செய்தார் என்றுதான் கொள்ள வேண்டும்.

இங்ஙனமாக, மதுரை ஞானப் பிரகாசர் இருந்து உரை செய்தார் என்ற கருத்து இப்போது உறுதியாவ

தோடு, இவருடைய வரலாறும் சிறிது விளக்கமாகிறது. இவர் இருபா இருபதுக்கும் சிவப்பிரகாசத்திற்கும் உரை எழுதினர் என்று மதுரைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார்; இவையன்றி சித்தியார் பரபக்கத்துக்கும் உரையெழுதினர் என்று இவருடைய குறிப்பினாலேயே இப்போது அறிகிறோம்.

மதுரைச் சிவப்பிரகாசர் உரைச் சிறப்புப் பாயிரம் அவ்வுரையின் காலம் சகம் 1410 என்று கூறுகிறது; அதாவது கி. பி. 1488; சிவப்பிரகாசரின் குருவாகிய மதுரை ஞானப்பிரகாசர் உரை செய்த காலம் 1450–75 எனக் கொள்ளுதல் பொருந்தும்.

சிவப்பிரகாசத்துக்குப் பல உரைகள் அச்சாகியுள்ளன. மதுரைச் சிவப்பிரகாசர் உரை (1488) அச்சானது 1872; பின் சமாஜம் 1940; சிதம்பரநாத முனிவர் உரை–நாகலிங்க முனிவர் பதிப்பு 1897; கொன்றைமாநகரம் சண்முகசுந்தர முதலியார் வேறுரை என்று அச்சிட்ட பதிப்பு 1896; நல்ல சிவதேவர் சிந்தனை உரை (1800) சமாஜம் 1933; திருஉருகமாமலை அடிகள் உரை (யாழ்ப்பாணத்து ராமலிங்க சுவாமிகள் என்பர்) 1908, 1963; திருவிளங்கம் புத்துரை 1918, 1933.

ஞானப்பிரகாசர் உரை இப்போது கிடைக்கிறது. இது இன்னும் அச்சாகவில்லை. இது அச்சிடுவதற்கு ஆவன செய்வது சைவ மக்கள் கடமை. இதனோடு, சிவப்பிரகாசத்தின் பழைய உரைகள் யாவும் தொகுத்த உரைக் கொத்து ஒன்றும் வெளிவர வேண்டியது மிக்க அவசியமாகும்.

கடைமுடி (கீழூர்)

(மு. அ.)

இடம்: இந்தத் தலம் மாயூரம் தாலுக்காவில் காவேரி வடகரையில் செம்பொனார்கோவில் என்ற பஸ்–ரயில் நிலையங்களிலிருந்து வடகிழக்காக 2½ மைல் தூரம் உள்ளது. மாயூரம் காவேரிப்பூம்பட்டினம் பஸ் பாதையில் ஏழு மைல் தூரத்தில் கீழூர் என்ற பஸ் நிற்குமிடத்திலிருந்து வடக்கே மூன்று பர்லாங்கு தூரத்தில் கோயில் அமைந்துள்ளது. கோயில் ஊருக்கு வெளியே வடமேற்கில் தனிப் புறமாக உள்ளது.

பெயர்: இது கடைமுடி என்ற தேவாரப் பெயர் உடையது. கீழூர், 88 – கீழையூர் என்று வழங்குகிறது. தேவாரத் தலம் இது அன்று என்றும், கோவிலடி யருகிலுள்ள சென்னம்பூண்டி என்ற வேறு ஊர் என்றும் சாசனச் சான்று கொண்டு மு. இராகவையங்கார் எழுதியிருக்கிறார். இதுபற்றி இறுதியில் சில சொற்கள் கூறுவோம். இங்கு சுவாமி பெயர் கடைமுடி நாதர்; அம்பிகை அபிராமி; தல விருட்சம் பஞ்ச வில்வங்களுள் ஒன்றான கிளுவை; இதன் அடியில் வட பிராகாரத்தில் கயிலாய நாதர் எழுந்தருளியிருக்கிறார்.

கோயில்: சிறிய கோயில்; மூலக்கோயில் முதலியன கற்கோயில். மேற்குப் பார்த்த சந்நிதி. எதிரே திருக்குளம்; கருணாதீர்த்தம்; நல்ல நிலைமையில் இல்லை. மதிலுக்கு வெளியே நிருதி திசையில் விநாயகர் கோயில். கோபுரம் இல்லை. வாயில் மட்டும் உள்ளது. ஒரே பிரகாரம்; தளவரிசையில்லை. திட்டமான மதில் சுவர் உண்டு. அக்கினி மூலையில் மடைப்பள்ளி; கிலமாயுள்ளது.

மூர்த்தி: கடைமுடி நாதர் 16 பட்டை உடைய திருஉருவம். நடுத்தர அளவு. வடமொழியில் “அந்திய சம்ரக்ஷணேசுவரர்” என்று சொல்லுகிறார்கள். இது அவ்வளவு பொருத்தமாக இல்லை. உள் நுழைந்தவுடன் இடப்புறம் லக்ஷ்மி இருக்கவேண்டிய இடத்தில் திருமால் இருந்தார் என்றும், அவர் சிலையைத் திருடர்கள் கொண்டு

போய்க் குளத்தில் எறிந்துவிட்டார்கள் என்றும், பின்னர் சிலையை ஊரார் கொண்டுபோய் அக்கிரகாரத்தில் தனிக் கோயில் கட்டி வைத்து வணங்குகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அடுத்து, தேவியோடு கூடிய முருகன், சண்டேசர், லிங்கோத்பவர், தக்ஷிணாமூர்த்தி ஆகியோர் உரிய இடங்களில்; தனிக் கோயிலில் நிருதி விநாயகர். அம்பிகை பெயருக்கேற்ற அழகிய வடிவம். தனியான சபையில் நடராஜாவும் அம்பிகையும்; அழகிய பழமை யான உருவங்கள்; அருகில் சம்பந்தரும், மாணிக்கவாச கரும்; பரவையோடு கூடிய ஆலாலசுந்தரரும் மாணிக்க வாசகரும் தனியே உள்ளனர்; வழிபாட்டுக்குரிய நிலையில் இம்மூர்த்திகள் இன்னும் வைக்கப் பெறவில்லை. நால்வர் வடிவங்களும் பழமையானவை; பின் சொன்ன இருவரும் அழகான மூர்த்திகள். எல்லா உற்சவ மூர்த்திகளும் உள்ளனர். எல்லோரும் நல்ல திருத்தமான அழகிய உருவங்கள். வேறு இடத்தில் பைரவர், சூரியன், கண்ணுவ ரிஷி, சம்பந்தர், அப்பர் சிலைகள் உள்ளன.

பாடல்: இந்தத் தலத்திற்கு வியாழக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த சம்பந்தர் தேவாரம் ஒரு பதிகம் உண்டு.

வரலாறு: இங்கு பிரமனும் கண்ணுவ ரிஷியும் பூசித்துப் பேறு பெற்றதாக ஐதீகம்.

நிர்வாகம்: 4 ஏக்கர் நிலம் உண்டு. ஆகவே நிர்வாகம் சிரமம். மூன்று கால பூஜை நடக்கிறது. அறங் காவலர் ஒருவர் உள்ளார். 1952இல் கும்பாபிஷேகம் நடந்தது. ஊருக்கு ஈசானிய திசையில் காவேரி மேற்காகத் திரும்பிப் பின் வடக்கு நோக்கிச் செல்கிறது. தேவாரத்துள் காவேரி குறிப்பிடப்பட்டுள்ளது. "கடைமுடி அதன் அயல் காவிரியே" என்றும் "பொன் திகழ் காவிரி பொரு புனல் சீர்—சென்றடை கடைமுடி சிவன்" என்றும் சம்பந்தர் பாடுகிறார்.

பெயர் பற்றிய குறிப்பு: மு. இராகவையங்காரவர்கள் 'தேவாரம் பெற்ற தலங்களும் சிலாசாசன வழக்கும்'

என்ற கட்டுரையில் (ஆராய்ச்சித் தொகுதி, பக்கம் 280) திருக்கடைமுடி என்பது தஞ்சாவூர் ஜில்லா கோவிலடிக்குக் கீழ்பால் 1½ மைலில் உள்ள திருச்சென்னம்பூண்டி என்று எழுதுகிறார். அங்குள்ள சிவாலயத்தில் சுவாமி பெயர் ஜடேச்வரர். ஊர் கடைமுடி என்றும் சடைமுடி என்றும் சாசனத்தில் எழுதப் பெற்றுள்ளது. கடைமுடிப் பதிகத்துள் சம்பந்தர் 'வளநகர் கடைமுடியே' என்று பாடுவதால், (1196-1203) (1205) விளநகர் என்ற பாடல் பெற்ற தலத்தின் கீழ்பாலுள்ள கீழையூரைக் கடைமுடி என்று கொள்ளும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது போலும் என்பது அவர் கருத்து.

இக்கருத்துப் பற்றிச் சில சொற்கள் கூறத் தக்கன. திருக்கடைமுடி என்னும் கீழூர் விள நகருக்கு அருகில் இல்லை; செம்பொன் பள்ளி அல்லது நனி பள்ளி அருகு என்றால் பொருந்தும். ஆகவே, வளநகர் கடைமுடி என்பது விளநகர் கடைமுடியாய்க் கருதப்பட்டது என்ற கூற்றுப் பொருந்தாது. இரண்டாவதாக, சென்னம்பூண்டி கடைமுடி என்றால், நாம் இரு கடைமுடி இருந்தனவென்று கொள்ளவேண்டும். திருமுல்லைவாயில் இரண்டு; இரண்டும் பதிகம் பெற்றன. திருமாந்துறை இரண்டைப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது; இரண்டையும் சம்பந்தர் பணிந்து பாடினார் என்றும் குறிப்பிடுகிறது; ஒன்றுக்குப் பதிகம் கிடைக்கிறது; மற்றது கிடைக்கவில்லை. அது போல, கடைமுடியும் இரண்டு இருந்திருக்கலாம்; ஒன்று சம்பந்தர் பதிகம் பெற்றது கீழையூர். மற்றது சாசனத்துள் கடைமுடி எனக் குறிப்பிடப்பட்டது; அவ்வளவே. கீழையூர்க் கடைமுடிக்குக் கல்வெட்டு இல்லை.

இனி மூன்றாவதாக, உமாபதி சிவாச்சாரியர் பாடியதாக வழங்கும் சிவக்ஷேத்திர சிவநாம சத்தி நாமக் கலிவெண்பா, திருக்கடைமுடியைத் திருக்கண்ணார் கோயிலுக்கும் திருநின்றியூருக்கும் இடையில் காவிரி வடகரை 19ஆம் தலமாகக் கூறுகிறது. இயற்கையமைப்பில் இது சரியே!

"—நேயமுடன்

அன்பாம் கடைமுடியை ஆளும்அபி ராமிபுணர்
இன்பாம் கடைமுடிநல் ஈச்சுரா"

என்பது பாட்டு. கலிவெண்பா, உமாபதி சிவாச்சாரியார் பாடிய தாயினும், அல்லவாயினும், மிகவும் பழையது என் பது பலரும் ஒப்புக்கொண்டது. அதன் கருத்துப்படி, கீழூரே கடைமுடி; எனவே இக்கருத்து மிகவும் பழைய தென்பதில் ஐயமில்லை. சேக்கிழார் கடைமுடியைக் கூற வில்லை. அன்பர்கள், சம்பந்தர் புராணம் 285ஆம் பாட் டில், "பிஞ்ஞகர் கோயில் பிறவும் உருகிய அன்பால் இறைஞ்சி உயர்தமிழ் மாலை கொண்டேத்தி" என்ற தொடரில் திருக் கடைமுடியும் அடங்கியதாகச் சொல்லு கிறார்கள். இது பிழை என்று சொல்ல இயலாது. கண் ணூர் கோயில்–கடைமுடி ஆறு மைல், கடைமுடி–ன்றியூர் ஆறு மைல்; கால் நடையாகச் செல்லுவதானல்.

இவற்றால் நாம் கூறியது, சென்னம்பூண்டி கடைமுடி யானாலும், அது மற்றொரு கடைமுடியாகும். கீழூரே பாடல் பெற்ற கடைமுடி என்ற ஆன்றோர் கொள்கையை அது பாதிக்காது என்பதே பொருந்தும்.

அம்பலவாணர் அருள்

(புலவர். தா. சுப்பிரமணியம்)

பொன்னம்பலத்தில் நடனமாடும் அம்பலவாணப் பெரு மான் பொன்னார் திருவடி மலர்களைப் பணிந்து போற்று தலே பிறவி எடுத்ததற்குரிய பெரும் பேறாகும். நற்றவத் தினர் உள்ளிருந்தோங்கும் நமச்சிவாயத்தை–கற்றவர் போற் றும் கற்பகக் கனியை–நற்பதமளிக்கும் நாதனைக் கண்ணாரக் கண்டு, கையாரக் கமலம் போல் குவித்து, தலையார வணங்கி, நெஞ்சார செஞ்சொற் பாமாலையால் போற்றி, உடலார நிலத் தில் வீழ்ந்து வணங்கி வழிபாடு செய்தற்கும் இறைவன் திருவருள் துணை வேண்டும். அண்டங்களின் இயக்கத்தி லிருந்து, அணுவின் அசைவு வரை எச்செயலும் திருவரு ளின் துணையின்றி நடைபெறாதென்பதுணர்தல் வேண்டும். 'அகிலாண்டகோடி யெல்லாம் தங்கும் படிக் கிச்சை

வைத்து உயிர்க்குயிராய்த் தழைத்து நிற்பது' திருவருளே யாகும். எனவே என்செயலாவதொன்றில்லை எல்லாம் நின் செயலே என ஆன்றோர்கள் கூறிப் போந்தனர்.

இறைவன், "ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" ஆகவே, திருவருளை உணர்தற்குப் புண்ணியத்தின் வழி வந்த நுண்ணுணர்வு தேவை. அவனருளாலேதான் அவன் தாள் வணங்குதல் வேண்டும். குருந்த மரத்தின் கீழ் வந்திருந்தருள் செய்த பாங்கினைத் 'தானே வந்தெம்மைத் தலையளித் தாட்கொண்டான் வான் வார் கழல் பாடி' என்று வாழ்த்தினார், மாணிக்கவாசகப் பெருமான்.

திருவருளின் விந்தையை என்னென்று இயம்புவது! எண்ணிலடங்கா. வாலறிவன் பேரருளைச் சிற்றறிவால் எங்ஙனம் அறிதற்கூடும்; உயிர்களின் நிலைக்கேற்ப ஆட்கொள்ளும் திறம் வியந்து போற்றற்குரியதாகும். நமக்கு விருப்பமானவற்றை இன்பம் என்கிறோம். அல்லாதவற்றைத் துன்பம் என்கிறோம். விரும்பியது நடந்தால் அருள் என்கிறோம். விரும்பாதது நடந்தால் மருள் என்கிறோம். திருவதிகை சித்தவடமடத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் படுத்துறங்குகின்றார். வீரட்டானத்துப் பெருமான் திருவடி தீட்சை செய்தற்பொருட்டு, முதியவர் வடிவில் வந்து, தம் திருவடி மலர்களால் சுந்தரர் தலையை மிதிக்கின்றார். அதனை உணரப்பெறுது, வெகுண்டு இரைந்து பேசுகிறார். அச் செயல் முதலில் அவருக்குத் துன்பமாகவே இருந்தது. பின்னர் இறைவன் உணர்த்த உணர்ந்த பின், "தம்மானை அறியாத சாதியரும் உளரே" என்று வருந்திப் பாடியருளினார் சுந்தரர்.

ஆழ்ந்து நோக்குமிடத்து எது இன்பம்? எது துன்பம்? என்பதையே விளங்கிக் கொள்ள முடியவில்லை. இன்பத்தைச் சுவைத்துக்கொண்டே சென்றால், அதன் பிரிவின் போழ்தும், முடிவின் போழ்தும், அளக்கலாகாத் துன்பமாக அமைகின்றது; துன்பத்தில் தொடர்ந்து செல்லச் செல்ல

முடிவில் இன்ப வாரிதியில் கலக்க விடுகிறது. இதனுல்தான், "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ருர், மாணிக்கவாசகர்.

இறைவன் அருளாடலை ஆன்ருேர் வாக்கால் ஈண்டுக் காண்போம். இறைவன் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அமுதம் கொடுத்து ஆட்கொண்டார். திருநாவுக்கரசு நாயனுருக்கு மிகக் கொடிய சூலை நோய் தந்து ஆட்கொண்டார். இஃது மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து இறைவன் விருப்பு வெறுப்பு உடையான் போல் காணப்படும். ஆழ்ந்து நோக்கினுல் அதன் தத்துவம் புலனுகும். இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நான்மணிமாலைப் பாடல் ஒன்ருல் நன்கு விளக்கியுள்ளார்.

"வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்த! பொது
ஆட்டிற்கு வல்லான் ஒருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்கு முன் நல்கினும்என்
பாட்டிற்கு நீயும் அவனும்ஒப் பீர்எப் படியினுமே"

"வீடு பேற்றினை அடைதற்கு வாயில் போன்று உதவுகின்ற தேவாரத் திருமுறைகளைப் பாடி, இறைவன் பாத மலரில் சாத்திய திருநாவுக்கரசு சுவாமிகளே! எல்லா உயிர்களும் கடைத்தேறுதற்காகப் பொதுவாக ஆடல் புரியும் அம்பலவாணப் பெருமான், திருஞானசம்பந்தருக்கு ஞானப் பாலமுதம் கொடுத்து ஆட்கொண்டாலும், உலகில் யாரும் அநுபவிக்க இயலாத கொடிய சூலை நோயை உனக்கு முன்பு கொடுத்து ஆட்கொண்டாலும் அதனுல் என்ன? யான் பாடித் தொழுதற்கு இருவரும் ஒருபடித்தானவர்களே"—என்று போற்றியுள்ளார்.

ஒருவர்க்குப் பாலமுதமும் ஒருவர்க்குக் குடர் நோயும் தந்து ஆட்கொண்டார் என்பதை மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து வேற்றுமையாகத் தெரிகிறது. ஒரு கண்ணில் வெண்ணெய், மற்றொரு கண்ணில் சுண்ணும்பா என

எண்ணத் தோன்றுகிறது. நடுவொரீஇ அல்ல செய்ததாக வும் நமக்குப் படுகிறது. எல்லாவுயிர்களும் இனிது தழைத் தோங்குவதற்காக அருளாடல் புரிபவன் இறைவன். எல்லா உயிர்களும் இறைவன் குழந்தைகள் அல்லவா? நன்றுடை யான் தீயதில்லான் ஈசன். எவ்வுயிர்க்கும் தம்முளே ஒத்து அருள் புரிபவன் ஈசன். ஆகவே, இறைவனிடத்தில் வேறு பாடு இல்லை என்பதை விளக்கவே "பொது ஆட்டிற்கு வல்லான்"—என அடிகளார் குறித்துள்ளார். சூலை நோய் பெற்ற திருநாவுக்கரசர் தீவினையாளரா என்றால், அதுவு மன்று; அவர் அருளிய தேவாரப் பாடல்கள் வழிவழி வரும் அடியார்கள் வீடுபேற்றை அடைதற்கு வாயில் போன்றது என்பதை விளக்க, "வீட்டிற்கு வாயிலெனுந் தொடை சாத்து சொல்வேந்த"—எனக் குறித்துள்ளார்.

அங்ஙனமாயின் ஒருவர்க்கு ஞானப் பாலமுதமும், மற் றொருவர்க்குச் சூலை நோயும் கொடுத்து ஆட்கொண்டது ஏன்? ஒருவர் இனியர். மற்றொருவர் இன்னாரா? என எண் ணத் தோன்றுகிறது. வெயில் பொதுவாகக் காய்கிறது; அது பொறாது என்பிலாப் புழுக்கள் துடிக்கின்றன. ஏனைய உயிர்களோ அதனதன் நிலைக்கேற்ப நிலைத்து வாழ் கின்றன. ஈண்டு வெயில், உயிர்கட்கேற்ப வேறுபடவில்லை. அதுபோலவே இறையருளும் பொதுவே. உணவுப் பண் டங்களைச் சமைக்கின்றோம். அதுவும் அதன் பக்குவத்திற் கேற்ப அமைகின்றது. ஒரே வகைக் காய்களைப் பொறியல், அவியல், வறுவல் எனப் பலவேறு வகைகளாகச் சமைக்கின் றோம். ஒன்று காரத்தில் வேகின்றது. மற்றொன்று நீரில் கொதிக்கின்றது. வேறொன்று எண்ணெயில் துவள்கின் றது. முடிவில் எல்லாம் சமைக்கப்படுகின்றன. அது போலவே இறைவனும் உயிர்களைப் பக்குவமாகச் சமைத்துக் கொள்கிறான். மருத்துவரிடம் நோயாளிகள் செல்கின்றனர். நோய் பொதுவே. எல்லாருக்கும் காய்ச்சல். ஒருவருக்கு மாத்திரை தருகிறார். மற்றொருவருக்குக் கலப்பு மருந்து தருகிறார். வேறொருவருக்கு ஊசி குத்துகிறார். ஒருவ

ருக்குக் கொடுத்த மருந்து கசக்கின்றது. மற்றொருவருக்குக் கொடுத்த மருந்து இனிக்கின்றது. இருவருக்கும் நோய் நீங்கிவிடுகின்றது. ஒருவருக்கு ஊசி குத்துவதால் வலிக்கின்றது. மற்றொருவருக்கு அந்தத் துன்பம் இல்லை. மருத்துவரிடம் வேறுபாடும் இல்லை. யாரிடமும் வேற்றுமை அவர் காட்டவும் இல்லை. நோயாளிகளும் மருத்துவரிடம் எந்தவிதமான வேறுபாடும் கொள்ளவில்லை. மாறாக, வாளால் அறுத்துச் சுடினும் மீளா அன்பே கொள்கின்றனர். இறைவன் பவரோக வைத்தியன் அல்லனோ! பக்குவமாகப் பிணி போக்கி அணி செய்கின்றான். பொன்னை அணியாக்க வேண்டுமானால், அது, அனல்பட்டு, அடிபட்டு, பொடிபட்டு, புனல்பட்டு, நெளிந்து நெகிழ்ந்துதான் உருவம் பெற்று, ஒளி பெற்றுத் திகழ வேண்டும்.

ஆயினும் ஒருவர்க்கு இன்பமும், மற்றொருவர்க்குத் துன்பமும் அன்றோ தோன்றுகிறது எனச் சிறிது எண்ணம் எழுகின்றது. எது துன்பம்? எது இன்பம்? என்பதை ஆழ்ந்து சிந்திக்குமிடத்து, ஒன்றின் நீட்சி மற்றொன்றின் தொடக்கமாக முடிகின்றது. குளிர்மையை இன்பம் என்கிறோம். இது பருவத்திற்குப் பருவம், நாட்டிற்கு நாடு, தட்ப வெப்பத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றது. வெம்மை மிகு நமது நாட்டில் மாலை மதியம், மகிழ் தென்றல், கொட்டும் அருவி, குளிர் பொய்கை, குயில் கூவும் சோலை, கோலமிகு பசுமைக் காட்சி, நீள் இன்பங் கொள் நீழல், முதலியவற்றைக் காண்தொறும் நினைக்குந்தொறும் இன்பங் கொள்கின்றோம்.

> "மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நீழலே." —அப்பர்.

இயற்கை எழில்மிகு இன்பக் காட்சியின் ஊடே நின்று இறைவன் நடம்புரி இனிய காட்சியை, இராமலிங்கர் வாயிலாகக் காண்போம்.

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுநடத் தரசேஎன் அலங்கல்அணிந் தருளே"
—திருவருட்பா.

இவ்வாறு குளிர் இன்பத்தை இறையருளாகப் போற்றி வழிவழி அநுபவித்து வருகிறோம். வெம்மைச் சூழலின் போது குளிர்மையை இன்பமாகக் கருதுவது போல, குளிர் பருவத்தில் வெம்மையை அன்றோ இன்பமாகக் கருதுகின்றோம். நக்கீரர், நெடுநல்வாடையில் வெம்மைச் சுவையை எங்ஙனம் வருணித்துள்ளார் என்பதையும் ஈண்டுக் காண்போம். கார்காலம் புதுமழை பொழிந்து எங்கும் குளிர் நிறைந்துள்ளது. அதுபோழ்து ஆயர்கள் மேட்டு நிலம் சேர்ந்து, குளிர் தாங்காது கைகளை நெருப்பில் காயவைத்து, குளிரால் பறை கொட்டும் கன்னங்களில் ஒற்றிக் கொண்டனர்.

"கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க"
என்றார்.

இதுநிற்க. குளிர் நாட்டினரோ என்றால் வெம்மைச் சுவையையே முழுவதும் விரும்புவர். அவர்களின் இலக்கியங்கள் வெம்மைச் சுவையையே வருணித்துள்ளன. இதனால் பருவத்திற்குப் பருவம், நாட்டிற்கு நாடு, சூழ்நிலைக்கு ஏற்ப இன்பச் சுவைக்குப்" பொருள் மாறுபடுகின்றது என்பது ஈண்டுச் சிந்திக்கற்பாலது! சூழ்நிலை இறைவன் திருவருளால் அன்றோ அமைகின்றது. ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில் ஆடல் புரியும் அம்பலவாணப் பெருமான், சூழ்நிலைக்கும், உயிர்களின் பரிபக்குவத்திற்கும் ஏற்ப அருள் புரிகின்றான் என்ற தத்துவத்தை நாம் நன்கு உணர்தல் வேண்டும் என்பதை விளக்கவே, சிவப்பிரகாச சுவாமிகள்,

"என்பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் எப்படியினுமே" என்று இறுதியில் முடிவு கூறியுள்ளார். எனவே, 'கண்ணுதல் கருணை கண் காட்ட வந்தெய்தி, எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சுதல்' நம் கடமை. உயிர்களின் நிலைக்கேற்ப 'கள்ளப் புலக் குரம்பைக் கட்டழித்து அருளல் இறை கடன்' எனவே,

> "உருகிப்பெருகி உளங்குளிர முகந்து கொண்டு
> பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
> மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியேம்
> திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று மாணிக்கவாசகப் பெருமான் வழிநின்று, திருவருளைப் போற்றி, அம்பலவாணப் பெருமான் அருளைப் பெறுவோமாக.

ஒரு வேண்டுகோள்

திரு. கே. தியாகராஜப் பிள்ளை அவர்கள் (82 இராஜா பசந்த்ராய் ரோடு, கல்கத்தா—29) இவ்யாண்டு முதற் கொண்டு நம் சமாஜ ஆயுள் உறுப்பினராதலோடு நம் ஆங்கில 'சைவ சித்தாந்தா' எனும் திங்களிதழ் நீடு நிலவ வேண்டும்; தமிழ் கூறு நல்லுலகன்றிக் கடல் கடந்தும் நம் சைவ சித்தாந்தக் கொள்கை பரவ வேண்டும்; அதற்கு ஆங்கிலந் தெரிந்தார்க் குறுதுணையாக இவ்விதழ் நற்பயனைத் தருகின்றது என்பதனை மனத்துட் கொண்டு அதன் பொருளாதாரப் பெருக்குச் செழிக்க ரூ 85/- நன்கொடையாக அனுப்பி வைத்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆங்கில 'சைவ சித்தாந்தா'க் கணக்கில் வரவுக்கு மேலாகவே செலவாகிக் கொண்டிருக்கிறது. விளம்பரம், அதிக உறுப்பினர் சேர்த்தல், நன்கொடை ஆகிய இம்மூன்று வழிகளாலும் உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் இதனைத் திங்களிதழாகவும் மாற்றி விடலாம். ஆகவே மேற்கூறப் பெற்ற முறைகளில் சமயப்பணி புரிந்து ஆங்கில இதழ் மூலம் நம் சமயக் கொள்கை அகில உலகத்துக்கும் பரவ உறுதுணை செய்ய யாவரையும் வேண்டுகின்றோம்.

(அம்பை)

பழியோரிடம் பாவமோரிடம்

(வித்துவான் அம்பை இரா. சங்கரனார்)

நம் வாழ்க்கையில் இன்ப அனுபவங்களும் துன்ப அனுபவங்களும் பல நிகழ்கின்றன. இன்ப உணர்ச்சி களூறுமமயத்து அறியாமையால் நம் முயற்சியாலேயே அவை வந்தன என எண்ணி இன்புறுகின்றோம் துன்ப முறும் போது இறைவன் இவ்வாறு கண்ணிலியாய்த் துன்புறுத்தலாமா? எனப் பழியை அவன் மீது போடு கிறோம். இந்நிலை படித்தவர், படிக்காதவராகிய எல்லாரி டையேயும் நிகழ்தல் வெள்ளிடைமலை.

இத்தகைய துன்பங்கள் நிகழ்வதும் இரு விதங்க ளாம். சிலர்க்குக் கண் முன்னே துன்பங்கள் நிகழும் போது யார் மீதும் குறை கூற இயலா நிலையில் இறைவன் மீது பழி சுமத்தி அவனை நொந்து கொள்வர். அவ்வா றின்றித் தாங்கள் இல்லாத சமயத்து ஏற்பட்ட துன்ப மெனின் அத்துன்பம் செய்தார் யார் என மனத்தை வாட்டிப் பலர் மீதும் ஐயமுற்று இறுதியாகச் சிலர் மீது உறுதியும் கொள்ள முற்படுவர். உண்மையிலேயே ஒரு பாவமும் அறியாத சிலர் தம் முன்னை வினைப் பயத்தால் இவ்வாறு சில துன்பங்களைத் துய்க்கும் நிலையையும் பெற் றிருக்கின்றனர்.

எடுத்துக் காட்டாகப் பட்டினத்தார் வரலாற்றில் இவ்வுண்மையினைத் தெளிவாயுணரலாம். பெருமானை நினைக்கத் தனிமையை நாடிச்சென்ற பட்டினத்தார் ஒரு விநாயகரின் பின்னர் இருந்து கண் மூடி மௌனியானார். அவ்வழியே சென்ற திருடர்கள், தங்களுக்குத் திருடு பலிக்குமாயின் ஒரு பகுதி விநாயகருக்கும் காணிக்கை செலுத்துவதாகக் கூறிச் சென்றனர். திருடும் பலித்தது; தங்கள் வாக்குப்படி ஒரு பொன் மாலையை அத்திருடர்கள் விநாயகருக்குக் கழுத்தில் இட்டுச் சென்றனர். மறுநாள் அரசர் அரண்மனையிலேயே திருடு போயிருப்பது தெரிந்து ஒற்றர் நாலா பக்கங்களிலும் தேடினர். இறுதியாக ஒரு பொன்மாலையை விநாயகர் கழுத்தில் கண்டு சிறந்த ஞானியாகிய பட்டினத்தாரையே குற்றத்துக்காளாக்கி

அரசன் முன் கூட்டிச் சென்று அவன் ஆணைப்படி சேவகர்கள் கழுவேற்றத் துணிந்தனர் அவ்வமயம் 'என்செயலாவ தியாதொன்று மில்லை' என்று தொடங்கும் செய்யுளைப் பாடிக் கடைசியில் 'முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே' எனப் பாடவும் உடனே அக்கழுமரம் தீப்பற்றி எரிந்ததாகவும் வரலாறு கூறுகின்றது.

திருடர்கள் பழிச் செயல் செய்ய பட்டினத்தார் ஒரு பாவமும் அறியாராய் இருந்தும் அவர் மீது அப்பழி சுமத்தப்பட்டுப் பின் இறைவன் அருளால் அது தீர்க்கப்பட்டது.

இவ்வாறு பெரியோர்களே வினைக்குள் அகப்பட்டுத் துன்புறும் பொழிது சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினர்களுக்கு அவ்வினை வாய்க்காது போகுமா? அந்நிலைக்கேற்ப ஏற்பட்டதுதான் திருவிளையாடற் புராணத்திலுள்ள பழியஞ்சின படலமாகும்.

இப்பகுதியில் இரு வரலாறுகள் வந்துள்ளன. இரண்டும் இருவருக்கு எதிர்பாராத நிலையில் ஊழ்வினைப்படி நேர்ந்த துன்பங்களே.

பார்ப்பனி யொருத்தியை ஓர் ஆலமர நிழலில் தங்க விட்டு நீர் கொணரும் பொருட்டுப் பார்ப்பனன் ஒருவன் நீர் நிலை நோக்கிச் சென்றான். ஏற்கனவே அம்மரத்தில் ஏறிட்டிருந்த அம்பொன்று காற்றலைசைப்புண்டு கீழே விழுந்து அப்பார்ப்பனியைக் கொல்லக் காரணமாயிற்று. நீர் கொண்டு திரும்பிய பார்ப்பனன் அம்மரத்தின் பின்னர் நிழலுக் கொதுங்கிய வேட னொருவனையும் பார்ப்பனியின் இறப்பு நிலையையும் கண்டு அவனே அவளைக் கொன்றதாகக் கருதி அரசனிடத்து முறையிட்டான். ஒரு பாவமும் அறியாத வேடன் ஒன்றும் தெரியாது விழித்தான். இந்நிலையில் அரசன் உண்மை நாட விழைந்து இறைவனையே துதிக்கின்றான்.

இக்காலத்தும் இவ்வாறு பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. நடுவணராயிருப்போர் பொறுப்பு இவ்வமயம் மிக

வும் சிறந்துள்ளது. ஏதோ சில சாட்சிகளைக் கொண்டு மாத்திரம் தெரிந்து அமைவுடைத்தெனக் கருதி முடிவு கூறலாகாது. பழியோரிடம் பாவமோரிடமாகவும் முடிய வாய்ப்புண்டு. ஆதலின் நடுவணர்கள் மிகவும் இறையருள் நாட்டம் பெற்றவராய் உண்மையுணரும் பெற்றி வாய்ந்த ஞானிகளாய் இறைவனுடன் கலந்து உண்மையை மனத்தால் காணும் ஆற்றல் பெற்றவர்களாயிருக்கின் நம் நாட்டில் பொய்மை வழக்குகள் மலியா. அதனால் யாரும் வல்வழக்கிடார். நடுவணருக்கு இறையருட் கலப்பு இன்றியமையாமையை இப்பழியஞ்சின படலம் வலியுறுத்துகின்றது. கடைசியில் இறைவனருளால் பாண்டிய அரசன் உண்மையுணர்ந்தான் என அறிகின்றோம்.

மற்றொரு வரலாறும் இவ்வுண்மை யுணர அடிப்படையாக உள்ளது. ஒரு மணமகனுக்கு வினை வாய்க்கும் காலம் நேர்கிறது. அவனோ மணமேடையிலிருக்கிறான். அங்கு அவிழ்த்து விடப் பெற்ற பசுவினைக் கொண்டு முட்டச் செய்து அம்மகனைக் கொல்லக் கருதுகின்றனர் கால தூதர்கள். அவ்வாறே செய்தும் முடித்தனர். இது " யாருக்கும் எச்சமயத்தும் யமபாசம் வரும். வினைப்படி எல்லாம் நடக்கும். வகுத்தான் வகுத்த வகையல்லால் பிற வகைப்படி ஒன்றும் நடக்காது " என்ற சிறந்த உண்மையை உணர்த்த மேலான எடுத்துக் காட்டன்றோ!

பாண்டியன் ஆலவாய்ச் சொக்கரிடத்துச் சிறந்த பக்தி பூண்டான். தன்னை நம்பிய ஒரு அடியாரைப் பழி பூணச் செய்தால் அது அப் பெருமானுக்கே சிறந்த பழியாகுமன்றோ. அதனால் பழியஞ்சிய சொக்கர் அருள் சுரந்தார் என்ற பேருண்மையை இப் பழியஞ்சிய படலம் விளக்குகின்றது.

திருவிளையாடற் புராணம் மன்பதைக்கு வேண்டிய நீதிக்குவைகள் பொதுளிய பொக்கிஷம் ஆகும். உயிர் இனங்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் வழிகாட்டி என்றும் கூறலாம். ஆகவே அத்தகைய நன்னூல்களைப் படித்து மக்கள் மாசிலத்து மிக்கோங்குவார்களாக.

வாழ்க உலகெலாம்

வா. தி. மாசிலாமணி முதலியார் மறைவு

(ஆசிரியர்)

ஏழைப் பிள்ளைகளின் கல்வி நலன் ஒன்றையே நாடி உழைத்து வந்த வா. தி. மாசிலாமணி முதலியார் சில தினங்களுக்கு முன் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாசிலாமணி முதலியார் பெயர் தமிழ் நாட்டில் அனைவருமே நன்கு அறிந்த ஒன்று. ஏழைப் பிள்ளைகள் நல்ல முறையில் கல்வி கற்று மேம்பட்டு உயர்ந்த நிலையில் வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அவர் தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். அந்தக் காலத்தில் மிகவும் ஆரம்ப நிலையிலுள்ள ஆசிரியர் பதவியில் அமர்ந்து, தமது வாழ்க்கையைத் தொடங்கினார். கிறித்துவ மதத்தில் பாதிரிமார் அயல் நாடுகளிலிருந்து இந்தியா நோக்கி வந்து வேலையைச் செய்து வந்த போதிலும் கூட, கல்வித் துறையில் ஈடுபட்டுப் பல்லாயிரக் கணக்கான இளம் பிள்ளைகளுக்குக் கண் திறந்து வைத்த நிலையை அவர் இளமையில் கண்ட போது, தாமும் அந்த விதமாக ஓர் இந்து மதப் பாதிரியாக வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் பயனாக, தமது ஊராகிய வாலாசாபாத்தில் 1916இல் அடக்கமாக ஒரு பாடசாலை தொடங்கினார். சென்ற 1966இல் ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாயின. ஆயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் இதில் கல்வி பயில்கிறார்கள். கல்வியோடு தொழிற்பயிற்சியும் வாழ்க்கைப் பயிற்சியும் அளிக்கப் பெறுகின்றனர். அங்குப் பயிற்சி பெற்ற மாணாக்கர் பலர் வாழ்க்கையில் பல துறைகளில் நல்ல பதவியில் அமர்ந்துள்ளனர்.

முதலியார் அவர்கள் சமாஜத்தோடு மிக நீண்ட காலத் தொடர்புள்ளவர். 1959ஆம் ஆண்டு சமாஜ ஆண்டு விழாவை வாலாஜாபாத்தில் தமது பள்ளியிலேயே நடத்தித் தந்தார். ஆண்டுதோறும் சமாஜத்திற்குப் பல அங்கத்தினர்களைச் சேர்த்து உதவுகின்ற பெருங் கொடையாளர்.

மாசிலாமணி முதலியார் மறைவு ஏழைப் பிள்ளைகளின் கல்வி நிலையில் ஓர் சகாப்தம் முடிந்தது போன்ற நிலையைக் குறிப்பதாகும். அவருடைய குடும்பத்தாருக்கும் பல்லாயிரம் மாணுக்கருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, பெரியாருடைய ஆன்மா பேரானந்தப் பெருவாழ்வு பெற இறைவன் திருவருள் துணை செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

சமயப் புரவலர் இருவர் மறைவு

(அம்பை சங்கரனுர்)

தேவகோட்டை சிவபாத சேகரர் தமிழ் வள்ளல், சைவ சித்தாந்தப் புரவலர், சிவ பூசைச் செல்வர் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் 9-3-67 வியாழக்கிழமை சிவராத்திரி விழா அன்று சிவபெருமான் திருவடி நிழலடைந்தார்கள்.

தனக்கென வாழா நோன்ருள் பிறர்க்கென முயலும் பெற்றியர் சைவ சமயப் புரவலர் வாலாசாபாத் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் 12-4-67 புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு இறைவன் இன்னருளுக்கு இலக்கானுர்கள் என்னும் இரு செய்திகளைக் கேட்டுப் பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாகச் சைவ மெய்யன்பர்களும் இம்மைப் பிரிவுக் காரணமாகத் துணுக்குருமலிருந்திருக்க முடியாது.

திரு. செட்டியார் அவர்கள் சிவபூசை செய்யும் சிறப்புக் கூறுந்தகைத்து. தான் பூசித்து மேம்பாடடைதலோடு பிறரையும் ஆற்றுப்படுத்திச் சிவபூசைச் செல்வர்களாக ஆக்கிய பெருமையும் இவர்களையே சாரும். பல சிவபூசகர்கள் மாநாடு நடத்துதல், உண்மையாய்ச் சிவபூசை எடுத்துக்கொள்ள விரும்புவோருக்குத் தம் சொந்தச் செலவிலேயே எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தல், தேவார, திருவாசகமாகிய சைவத் திருமுறைகளிடத்தும் சைவ சாத்திரங்களிடத்தும் அளவிடற்கரிய பற்றுள்ளங் கொண்டு அவைகளைப் போற்றுவோரை ஆதரிக்கும் உளப்பான்மை முதலிய சிறந்த பண்புகள் பலவற்றைத் தம்மகத்துக் கொண்டிருந்தார்கள். மிகச் சிறந்த செல்வராயிருந்

தும் அச் செல்வ மயக்கில் தன்னைப் பறி கொடுக்காது இறைவன் கழலிணைகளையே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருந்த இவர்கள் திறம் பல்லோரானும் வியத்தற் குரியது. அதனாற்றான் இறைவன் இவர்களைத் தனக்குரிய சிவராத்திரியன்றே ஆட்கொண்டான் போலும். அவர்கள் ஆன்மா நன்னிலையுற்றிருக்கு மென்பதுறுதி. அவர்களைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினருக்கு சமாஜம் தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் நம் அப்பா வா. தி. மா. அவர்கள் பிரிவு பற்றிச் சித்தாந்த ஆசிரியர் கருத்தினைத் தனியே காண லாம். திரு வா. தி. மா. அவர்கள் நம் சமாஜ மாநாட்டினை ஒரு சமயத் திருவிழாவாகவே கருதி அதற்கு ஆண்டு தோறும் வந்து கலந்து பலரையும் ஊக்குவதையே தம் வாழ்க்கைக் கடப்பாடாகக் கொண்டிருந்தனர்.

அண்மையில் நிகழ்ந்த திருச்சி மாநாட்டிற்குத் தான் உடல்நலக் குறைவு காரணமாக அவர் வரவில்லை. அதற்கு முன்னர் எல்லாமாநாடுகளுக்கும் ஒழுங்காக வந்திருந்தனர்.

தம் பொறுப்பிலேயே கடந்த இரண்டு ஆண்டுகளாக நூறு உறுப்பினர்களுக்குமேல் சேர்த்துத் தந்துள்ளார்கள் என்பதை நினைக்கும்போது அவர்களுக்கு நம் சமாஜத்தி டம் உள்ள ஈடுபாடு எத்தன்மையது என்பதனை அறிந்து கொள்ளலாம். தம் பொறுப்பிலேயே ஒரு ஆண்டு மாநா டும், பல மாதச் சிறப்புக் கூட்டங்களும், மாணவர்களுக் கெனச் சமயக் கோடை வகுப்பும் நடத்தித் தந்தனர். சமய சம்பந்தமாக அவர்கள் கொண்ட பேரார்வம், அது காரண மாக மேற்கொள்ள விரும்பும் செயல்கள் எவற்றிலும் முந்திக்கொள்ளும் தன்மையினர். அவர் பிரிவு நமக்கு எத்தகைய இழப்பு என்பது கூறாதே அமையும். அவரைப் பிரிந்து அவர் குடும்பத்தினர் மாத்திரம் வருந்தவில்லை. பல்லாயிரக்கணக்கான பழைய மாணவர்கள், பல்லாயிர ஏழை மாணவர்கள், நண்பர்கள் முதலிய பல்லோரும் வருந்துகின்றனர். நம் சமாஜம் எல்லாருக்கும் வருத்தத் தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் ஆன்மா சிறப்புற்றிலங்க பெருமான் இணையடிகளை வழுத்தி வணங் குகின்றோம்.

வருந்துகிறோம்

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினர் வித்துவான் திரு பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் மாமியார் அலர் மேல் அம்மாள் அவர்கள் 25–2–67 சனிக்கிழமை சீர்காழிக் கடுத்த மணிக் கிராமத்தில் இயற்கை யெய்தினுர்கள். அவர்கள் ஆன்மா நன்னிலையடைய இறையருள்புரிவ தாகுக.

நம் சமாஜ நெடுநாளைய உறுப்பினராய டாக்டர் எம். இரத்தினவேலு அவர்கள் 20–3–67 அன்று இறை வன் திருவடி நீழலடைந்தார்கள். அவர் ஆன்மா நன்னிலை யுற பெருமான் திருவருளை வேண்டி வழுத்துவதோடு அன்னுரைப் பிரிந்து வருந்தும் அவர் குடும்பத்தினருக்கு சமாஜம் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மதிப்புரை

தில்லைச் சிற்றம்பலவன் கோயில் :-

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை கொற்றவன் குடி லேன்ஸ், அண்ணுமலை நகர். ரூ. 1-50.

சிதம்பரம் தலவரலாறு ஆகிய இச்சிறு நூல், அழகிய பல படங்களோடு நன்முறையில் அச்சிடப் பட்டுள்ளது. தல வரலாறு, கோயில் வரலாறு, இலக்கியங்கள், கல் வெட்டு முதலான செய்திகள் விளக்கமாகக் தரப்பட் டுள்ளது. இத்தலத்தில் சோழ அரசன் செய்த பணி களும் இத்தலத்தால் விளைந்த சமய வளர்ச்சியும் விளக்க மாக இதன்கண் காணலாம். தில்லை பற்றிய இலக்கிய அட்டவணை சிறப்பாக உள்ளது. பின்னும் பெருக்கிக் கொள்ள இடமுண்டு. 13ஆம்பக்கம் உமாமதிசிவம் உண்மை விளக்கம் என்பது மனவாசங் கடந்தார் உண்மை விளக் கம் என்று இருத்தற்குரியது. சேக்கிழார் காலம் இரண் டாம் குலோத்துங்கன் காலம் என்று பலரும் ஒப்புக் கொண்டது. பக்கம் 33, 72; ஆனல் மூன்ரும் குலோத் துங்கன் என்று 70 ஆம் பக்கத்தில் இருப்பது திருத்துதற் குரியது. அப்படியே நம்பியாண்டார் நம்பி காலம் இராஜ இராஜசோழன் காலமாயிருக்க (பக்கம் 30) ஆதித்த சோழன் காலம் என்பது (பக்கம் 69) திருத்து தற்குரியது.

—ஆசிரியர்

திருவெம்பாவை

(R. கோவிந்தராஜப் பிள்ளை)

சைவ சமயக் குரவர்கள் நால்வருள் மணிவாசகப் பெருமான் ஒருவர். "உண்மையறிந்து உலகமெலாம் பிழைக்க அருட்கவி பாடிய பெரியவர்". அப்பெரியார் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் சேர்ந்து சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாந் திருமுறை யாயிற்று. திருவாசகப் பகுதிகளில் திருவெம்பாவை ஒரு பகுதியாகும். இருபது பாடல்களைக் கொண்ட அப்பகுதியின் ஒவ்வொரு பாடலும் 'எம்பாவாய்' என்று முடிகிறது. 'எம்பாவாய்' எம்பாவையாகித் 'திரு, வென்னும் அடை பெறறுத் திருவெம்பாவையாயிற்று. திரு+எமபாவை—திருவெம்பாவை என்ற புணர்ச்சிக்குத் தமிழிலக்கண விதியுண்டு. திருக்கோவையாருக்கு உரை வகுத்த பேராசிரியர் "திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு" எனக் கூறியுள்ளார். திருவெம்பாவை என்ற சொற்றொடரிலுள்ள திருவென்னும் அடைமொழி அழகின் பிறப்பிடமாகிய இறைவனைக் குறிக்கும். சுந்தரன், சொக்கன் என்பவை போன்ற சிவபரம் பொருளின் திருப் பெயர்கள் அவரை அழகுத் தெய்வமாகவே காட்டி நின்றன. 'எம்பாவாய்' என்ற விளிச்சொல் பாவையர் அல்லது பெண்கள் ஒருவரோடொருவர் உரையாடியதை உணர்த்துகிறது. எனவே திருவெம்பாவை வாசகம், சிவபரம் பொருளைப் பெண்கள் புகழ்ந்து பேசியதாக மணிவாசகர் பாடிய அருட்கவியாகும்.

ஆளுடைய அடிகள் அல்லது மணிவாசகர் திருவெம்பாவையைப் பாடிய காலம், இடம், சந்தர்ப்பம் ஆகியவற்றை இனி நாம் காண்போம். சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தில், தேவார ஆசிரியர்களாகிய மூவரின் வரலாறுகள் வெகுவிரிவாகப் பேசப் பட்டிருக்கின்றன. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும செய்த சிவதல யாத்திரைகளையும் அன்னார் ஆங்காங்குப் பாடிய தேவாரப் பதி

கங்களையும் சந்தர்ப்பத்தோடு அவ்வாலாறுகள் விளக்குகின்றன. மேலும், அம்மூவரின் புராணங்களில் சில தேவாரப் பதிகங்களுக்குச் சேக்கிழார் தீட்டியுள்ள விரிவுரைகளும், விளக்கங்களும் நம்மை வியக்கச் செய்வதோடு அக்குன்றைநகர் குலக்கவியைச் சிறந்ததொரு உரையாசிரியராகவும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கடவுண்மா முனிவர் தாமியற்றிய திருவாதவூரடிகள் புராணத்தில், சேக்கிழாரின் முறையைப் பின்பற்றி, வாதவூரரின் சிவதல யாத்திரையைப் பற்றியும், அவ்வத் தலங்களில் அவர் பாடிய திருவாசகங்களைப் பற்றியும் சற்று விரிவாகப் பேசியிருக்கிறார். அப்புராணத்தின் ஐந்தாவது சருக்கமாகிய திருவம்பலச் சருக்கத்தில் திருவெம்பாவையின் தோற்றம் பின் வருமாறு பேசப்பட்டுளது. சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் குருவடிவு காட்டித் தம்மை ஆட்கொண்ட பின், வாதவூரண்ணல் அத்தலத்தை விட்டு நீங்கி, திருவம்பலத்தை நோக்கிச் செல்வாராய், திருவுத்தரகோச மங்கை, திருவிடை மருதூர், சீகாழி, முதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர் ஆகிய தலங்களைத் தரிசித்து அருணபுரியென்னும் திருவண்ணாமலையை அடைந்தார். மாலயன் தேட அப்பதியில் அழலுருவாய் நின்ற அருட்பெருஞ்சோதியை இறைஞ்சிய திருவாதவூரர் அங்குச் சில நாள் தங்கினார். அங்கவர் உறையுங் காலத்தில் மார்கழித் திங்கள் திருவாதிரை நாள் வரவே, அதற்கு முன் பத்துத் தினங்களில் அவ்வருணையம் பதியில் வாழும் மாதர்கள் விடியற்காலையில் எழுந்து மனைகள் தோறும் சென்று பிற மாதரைத் துயிலெழச் செய்து அவருடன் கூடித் தீர்த்தங்களில் மார்கழி நீராடினார்கள். அவ்வாறு நீராடும் மாதர்களின் இயல்பைக் கண்ட மணிவாசகப் பெருமான் அன்னார் புகன்றதாகத் திருவெம்பாவையைப் பாடினார். திருவாதவூரடிகள் புராணத்தில்

1. மாதர்கொண் மாத ரெல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்

ஆதிரை முன்னீ ரைந்தே
    ஆகிய தினங்கள் தம்மின்
மேதகு மனைகள் தோறும்
    அழைத்திருள் வடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப்
    புனற்றடம் ஆடல் செய்வார்.

2. அன்னவர் இயல்பு கண்டார்
    ஆங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை
    வாசகம் பேசி........

என வரும் இரு செய்யுள்களும் திருவெம்பாவையின் தோற்றத்தைக் குறிப்பதாகும். ஆகவே, அவ்வாசகம் பாடப் பெற்ற காலம் மார்கழி மாதம் திருவாதிரை நாளுடன் முடியும் பத்துத் தினங்களென்பதும், இடம் திருவண்ணாமலையென்பதும், சந்தர்ப்பமும் தெள்ளிதிற் புலனாகின்றன.

'திருவெம்பாவை' வாசகத்திலேயே அதன் தோற்றத்திற்கேற்ற காலம், இடம், சந்தர்ப்பம் இவற்றிற்குக் குறிப்புகளுண்டு. அப்பகுதியின் இருபதாம் பாடல் 'போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்' என்று முடிவதால் மார்கழி நீராடலே திருவெம்பாவையில் பேசப்பட்ட பொருள் என்பதிலும், பெண்கள் நீராடச் சென்ற விடியற் காலையில் அன்னார்புகன்ற இறைவனது புகழ் மாலைகளே இருபது பாடல்களாக அமைந்துள வென்பதிலும் சிறிதும் ஐயமில்லை போதார் அமளியின் மேல் துயிலுறும் பெண்களை விழித்தெழுந்த பெண்கள் துயிலெழுப்புவதும், "இன்னந்துயிலுதியோ...... என்னே துயிலின் பரிசு", 'இன்னம் புலர்ந்தின்றோ', 'வாழியீதென்ன உறக்கமோ வாய் திறவாய்' என்ற அவர்தம் உரையாடலும் வைகறை யாமத்தை உணர்த்திநின்றன. எட்டாம் பாடல் 'கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்' என்று தொடங்குகிறது. பதினெட்டாம் பாடலில், அண்ணாமலையான் அடிக்கமலத்தைக் கதிரவன் ஒளிக்குவமையாக்கி, அவன் திருவடியைச்

சென்றிறைஞ்சும் விண்ணோரின் முடிமணித் தொகையை விண்மீன்களுக் குவமையாக்கி, 'இறைவன் திருவடியொளியில் அத்திருவடியை வணங்குகின்ற தேவர்களின் முடிமணித் திரளின் ஒளி மழுங்துவது போல, இருளைச் சீத்துக் காலையில் எழும் கதிரவன் ஒளியில் தாரகைகளின் ஒளி மழுங்குகிறது' என்கிறார் மாணிக்கவாசகர். மேற்கூறிய இரு காட்சிகளும் வைகறையின் இயற்கை யழகை விளக்குகின்றன.

மேலும், மார்கழி மாதமே தேவர்களுக்கு வைகறை யாமம் என்றதொரு கணக்குண்டு. ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் இறுதியாகவுள்ள ஆறு மாதங்கள் (தக்ஷிணாயனம்) தேவர்களுக்கு இரவாகவும் தை மாதம் முதல் ஆனி மாதம்வரையில் (உத்தராயனம்) உள்ள ஆறுமாதங்கள் அவர்களுக்குப் பகலாகவும் பேசப்படுகின்றன. ஆகவே மார்கழி மாதம் தேவமானப்படி வைகறைப் பொழுதாகும். இவ்வுண்மைகளை யொட்டியே நாம் இன்னும் திருவெம்பாவையை மார்கழி மாதத்தில் நாள்தோறும் விடியற்காலையில் ஓதியும் ஓதக் கேட்டும் வருகிறோம்.

கடவுண்மா முனிவர் தாமிபற்றிய திருவாதவூரடிகள் புராணத்தில் திருவாதிரை நாளுக்கு முந்திய ஈரைந்து தினங்களில் திருவண்ணாமலையில் நீராடச் சென்ற பெண்கள் புகன்றதாகத் திருவெம்பாவையை மாணிக்க வாசகர் பாடினார் என்று கூறியுள்ளார். அத்திருவாசகப் பகுதியில் மார்கழி நீராடல் என்ற குறிப்பு மட்டும் காணப்படுகிறதேயன்றித் திருவாதிரை நாளைப் பற்றிய குறிப்பு யாதொன்றுமில்லை. ஆனால், திருவாதிரை ஆதிரையான் என்ற நாமம் பூண்ட சிவனுக் கேற்ற நட்சத்திரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளுடன் பௌர்ணமி திதி, அதாவது முழு நிலவு கலந்து வருவது இயற்கை. ஆண்டாள் பாடிய திருப்பாவையின் முதற் பாட்டு 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்

நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்' என்று தொடங்குகிறது. மார்கழி மாதத்தில் மதி நிறைந்த நாள் திருவாதிரை நாளாகத்தான் இருக்க வேண்டும். ஆண்டாள் பாடிய திருப்பாவையென்னும் பாசுரம் ஆயர் பாடியில் கன்னிப் பெண்கள் பாவை நோன்பு அல்லது கார்த்தியாயணி விரதத்தை மேற்கொண்ட அடிப்படையில் பாடப் பெற்றதாகலின் திருவாதிரை நாள் அவ்விரதத்திற்கும் பொருந்துவதாயிற்று.

நந்தமிழ் நாட்டில் திருவாதிரை நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட சிவதலம் சைவர்களுக்குக் கோயில் எனப்பட்ட சிதம்பரம் அல்லது தில்லை நகராகும். 'அம்பலத்தாடுமையர் செங்கையிலேடு வாங்கித் தெளிவுறவரைய', ஏற்கனவே தாம் பாடியுள்ள திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் மணிவாசகப் பெருமான் மீண்டும் ஒருமுறை ஓதித் தில்லை மூவாயிரவர் அப்பாடல்களின் பொருள் யாதெனக் கேட்க, அவருடன் பொன்னம்பல மெய்தித் தாம் பாடிய தமிழ் மாலைகளின் பொருள் கூத்தப் பிரானே யென்று சொல்லிக் 'கை காட்டித் தம்முருவங் காட்டாமல் அவர் மறைந்த பெருமையுடையதும் அத்தலமே யாம். திருவெம்பாவையில் திருச்சிற்றம்பலம் மூன்றிடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது. இரண்டாம் பாடலில் 'தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசன்' என்றும், பன்னிரண்டாம் பாடலில் 'நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங் கூத்தன்' என்றும், பதினான்காம் பாடலில் 'சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி' என்றும் வருவதைக் கொண்டு திருவண்ணாமலையில் பெண்கள் ஆதிரை விழாவை முன்னிட்டே அம்பலவாணரின் புகழைப் பாடி மார்கழி நீராடினார்கள் என்று கொள்வதற்கிடமுண்டு. வாதவூரர் திருவெம்பாவையில் சிற்றம்பலத்தைப் பாடியிருப்பதை ஆதாரமாக வைத்தே கடவுண்மா முனிவர் திருவாதிரை விழாக் காலத்தில் திருவண்ணாமலையில் பெண்கள் மார்கழி நீராடினார்கள் என்று பேசியுள்ளார் போலும்.

திருவெம்பாவைப் பாசுரம் 'திருவண்ணாமலையில் அருளிய திருவெம்பாவை' என்ற தலைப்புடன் காணப்படுகிறது. பதினெட்டாம் பாடலில் 'அண்ணாமலையான்' என்று வருவதைக் கொண்டே அப்பாசுரம் திருவண்ணாமலையில் பாடப் பெற்றது என்று சொல்ல முடியாது. அச்சிவ தலச் சிறப்பு கந்தபுராணம், தக்ஷகாண்டம் அடிமுடிதேடிய படலத்தில் பேசப்பட்டிருக்கிறது. அக்கதைச் சுருக்கம் பின் வருமாறு :—

முன்னமோர் யுகத்தில், திருமாலும் பிரமனும் தம்முள் தருக்கி தாந்தாம் பரம்பொருளெனக் காட்ட நீண்ட காலம் போர் புரிந்தார்கள். நாரத முனிவர் அவர்கள் முன் தோன்றி, மேலும் அன்னார் போரிட்டால் அருவுருவாய் நின்ற சிவம் சோதியாய் நடுவுறத் தோன்றும் என்று கூறி அமரை நிறுத்தச் சொல்லிப் போனார். ஆயினும் அவர்கள் நாரத முனிவரின் சொல்லை ஏற்காமல் தொடர்ந்து ஓராயிரம் ஆண்டுத் தம்முள் இகலிப் போரிட்டார்கள். அதைக் கண்ட சிவபரம் பொருள் அரும்பெருஞ்சோதியாய்த் தோன்ற, அச்சோதியின் அடியையும், முடியையும் 'நீவிர் காண்மின்' என்றதோர் அசரீரி வாக்கு விசும்பிடை எழுந்தது. அதனைக் கேட்ட இருவரும் அச்சோதியின் அடியையோ முடியையோ முதலிற் காண்பவரே பீடுயர் தலைவராவர் என்று வஞ்சினம் பேசித் திருமால் பன்றி வடிவங் கொண்டும், பிரமன் அன்னவடிவங் கொண்டும், முறையே அச்சோதியின் அடியையும் முடியையும் தேட ஆரம்பித்தார்கள். ஊழிகள் பலகடந்தும் அவற்றைக் காணாராய்த் தருக்கிழந்து சிவனை இலிங்க வுருவத்தில் வழிபட்டார்கள். சிவபெருமான் மான்மழுவுடன் அவர் முன் தோன்றி வேண்டிய வரத்தைத் தந்தான். அழற் பிழம்பாய் நின்ற அவ்வுருவம் சுருங்கி ஒரு மலை வடிவாயிற்று. அம்மலைதான் திருவண்ணாமலை அல்லது அருணகிரி எனப்படுவது. 'அரியும் யானும் (பிரமன்) முன் தேடும் அவ்வனற்கிரி அனலகிரி யெனும்படி நின்றதால்'

என்ற கச்சியப்ப சிவாசாரியரின் வாக்கு இவ்வுண்மையை வலியுறுத்துகிறது.

மேற்கூறிய புராணக் கதையினின்று சிவபரம் பொருளின் சோதிப்பிழம்பே திருவண்ணாமலை யாயிற்றென்று நாம் அறிகிறோம். திருவெம்பாவையின் முதற்பாடல் 'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதியை யாம் பாடக் கேட்டேயும்' என்று தொடங்குகிறது. "பாசம் பரஞ் சோதி" எனத் தொடங்கும் இரண்டாம் பாடலில் இறைவனைத் 'தேசன்' அதாவது ஒளி யுடையவன் என்று மாணிக்கவாசகர் பேசுகிறார். ஐந்தாம் பாடல் தொடங்குகின்ற "மாலறியா நான்முகனுங்காணா மலையினை" என்ற சொற்றொடர் மேற்சொன்ன கந்தபுராணக் கதையையும் திருவண்ணாமலைத் தலத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது. பதினான்காம் பாடலில் "சோதிதிறம் பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி, ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடி" என்று வருவதைக் கொண்டு ஆதியும் அந்தமும் தானேயாகின்ற ஒரு சோதிப் பொருளையே வாதவூரடிகள் ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி என்று குறிப்பிட்டதாக நாம் கொள்ளலாம். பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே" எனத் தொடங்குகின்ற பத்தாம் பாடல் இறைவன் சொரூபத்தால் ஒருவனே என்ற உண்மையை உணர்த்தி நிற்கிறது. திருவெம்பாவையின் இறுதிப் பாடலாகிய இருபதாம் பாடலில் மணிவாசகர் "நின் ஆதியாம் பாதமலர்" என்றும், "நின் அந்தமாம் செந்தளிர்கள்" என்றும் இறைவனுடைய திருவடிகளைப் போற்றுவதினின்று இறைவனுடைய அடியும் முடியும் அந்தமே ஆதியாகிய ஒன்றாகி, கால தத்துவங்களைக் கடந்த அவன் திருவடிகளே முடிந்த பொருளாயின வென்பது பெற்றாம். இவ்வகையில், திருவெம்பாவையில் பேசப் படும் சோதிப் பொருளின் தன்மையையும் திருவண்ணாமலையின்தோற்றச் சிறப்பையும் இயையவைத்துப்பார்த்தால் வாதவூரடிகள் அவ்வருட்பாடலைத் திருவண்ணாமலையில்தான் பாடியிருக்கவேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு.

(தொடரும்)

1966ல் நிகழ்ந்த சமாஜத் தேர்வில் வெற்றி பெற்ற வர்கள் விவரம் வருமாறு :—

சைவப் புலவர் தேர்வு

எண்	தேர்வெண்	பெயர்	வகுப்பு
1	154	கோ. முத்துசாமி	I
2	152	கோ. இராமலிங்கம்	II
3	153	தி. கோலப்பன் செட்டியார்	II
4	150	வை. இராமகிருஷ்ண ஐயர்	III

(திரு கோ. முத்துசாமி அவர்கள் முதல் வகுப்பில் வெற்றி பெற்றதால் அதற்குரிய பரிசுத் தொகையாக நம் சமாஜ அன்பர் ஒருவர் வைத்துள்ள மூலதனத்தி லிருந்து வரும் வட்டித் தொகையாகிய ரூ 50/– (ஐம்பதி னையும்) பரிசாகக் கொடுத்துள்ளோம் என்பதைத் தெரி வித்துக் கொள்கின்றோம்)

இளஞ் சைவப் புலவர் தேர்வு

எண்	தேர்வெண்	பெயர்	வகுப்பு
1	596	க. தங்கேஸ்வரியம்மா	I
2	592	க. வேல்முருகு	II
3	604	மா. அமிர்தலிங்கம்	II
4	578	க பொன்னையா	III
5	580	பொ. தெய்வேந்திரம்	III
6	593	செ. விஜயம்	III
7	595	சி. கந்தையா	III
8	599	பொ. தங்கவேலு	III
9	601	த. சாந்தலிங்கம்	III
10	603	சீ. பொற்பதி	III

(துணைச் செயலாளர்)

திருமண வாழ்த்து

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினர் திரு. கி. இல. பழநிசுவாமி அவர்கள் திருமகனுர் திருவளர் செல்வர்: இராசா சம்பந்தத்திற்கும், புதுவை திரு. கோ. சம்பந்தம் பிள்ளை அவர்கள் திருமகளார் திரு வளர் செல்வி: கஸ்தூரிக்கும் திருமணம் 17-4-67 அன்று புதுவையில் நிகழ்ந்தது. 22-4-67 அன்று சென்னை இராயப்பேட்டை உட்லண்ட்ஸில் தேநீர் விருந்தும் நிகழ்ந்தது. சமாஜத்தவர் புதுமணமக்களுக்கு மாலை அணிந்து வாழ்த்தினர்.

புது மணமக்கள் இறைவன் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று என்றும் நன்று வாழ குன்றுதோ றுடும் குமரனினிணையடிகளை வணங்கி வாழ்த்துகின்றேம்.

பண்பு மிகுநற் பெருந்தகையார்! பழநி சுவாமி தாம்பயந்த
இன்ப குணங்கள் மிகநிறைந்த இனிய இராசா சம்பந்தம்,
நன்று சிறந்த கஸ்தூரி நங்கை தன்னை மணம்புணர்ந்தார்!
என்றும் இவர்கள் சிவம்தமிழ்போல் இயைந்து மகிழ்ந்து
நனிவாழ்க!

தூய சிறந்த தமிழ்ச்சைவத் தோன்றல் பழநி சுவாமிநல்லார்,
ஏய ஈன்ற இணையில்தவப் புதல்வர் இராசா சம்பந்தம்.
நேயம் வாய்ந்த கஸ்தூரி என்னும் இருவர் நெறிமுறையில்
ஆயம் உவப்ப மணம்புணர்ந்தார்! அளவில் இன்பம்
உறவாழ்க!

பல்வ கையநற் பண்புடையார்! பழநி சுவாமி தவப்புதல்வர்
செல்வ இராசா சம்பந்தம் சிறந்த செல்வி கஸ்தூரி
நல்ல தனது துணைவிஎன நயந்து பொருந்த மணம்புணர்ந்தார்!
எல்லை யில்லாப் பலநலத்தால் இன்பம் ஓங்கி மிகவாழ்க!

—ந. ரா. முருகவேள்

மதிப்புரை

பெரிய புராணத்தில் பெண்மை என்னும் நூல் ஒன்று வரப் பெற்றேம். இந்நூல் ஆசிரியர் கோவைக் கவியரசு திரு நடேசக் கவுண்டர் அவர்களின் அருமை மகளார் செந்தமிழ்ச் செல்வியார் திரு. ந. சுப்புலட்சுமி யம்மையார் எம்.ஏ., பி.ஓ.எல்., ஆவார். இந்நூலில் பெரிய புராணத்தில் பெண்மை எத்தனை விதங்களில் அழகுறப் போற்றப் பெறுகிறது என்பதைப் பல கோணங்களில் ஆய்ந்து 16 தலைப்புக்களில் ஆசிரியர் மிகவும் அழகுற எழுதிச் சென்றுள்ளார். இந்நூல் இலக்கிய இன்பத்தோடு மாத்திரமின்றிப் பெண்ணுலகம் எவ்வாறு வாழ்ந்து நற்பேறு பெறலாம் என்பதையும் எடுத்துக் காட்டவல்ல சிறந்த துணையாகும். திரு. தெ. பொ மீ., திரு. அ. ச. ஞானசம்பந்தனுர் முதலிய தக்க பெரியார்களின் போற்றுரைகளோடு கூடியது.

காதலிலும் இறையருட் பொலிவைச் சேக்கிழார் பெருமான் கூறிச் செல்லுந் திறத்தை நுனித்தறிந்து ஆசிரியர் கூறிச் செல்லும் மாண்பு, பெண்பால் தெய் வீகப் பொலிவு முதலிய சிறப்புக்களை மிக மேம்பட இந்நூலில் காணலாம். 166 பக்கங்கள்; நல்ல அச்சு கொண்ட இந்நூல் விலை ரூ 2-00. இதனைக் கல்வி நிலை யங்களில் பாடப் புத்தமாக வைக்கின் இரு சாராரும் படித்துப் பயன் பெறுவதோடு அமையாது பெரிய புராணச் சிறப்பு, சேக்கிழார் பெருமை முதலியவற்றை யும் துய்க்க வாய்ப்புண்டு. சென்னை, அண்ணமலை, மதுரைப் பல்கலைக் கழகத்தினரும் இலங்கை அரசிய லாரும் இதனைப் பயன் படுத்தி மக்களைச் சிறக்கச் செய்ய முற்படுவார்களாக. சிறப்பாக யாவரும் இதனைப் படித்து இன்புறுவார்களாக. வேண்டுவோர் :—

செந்திற் பதிப்பகம், 84-நான்காம் வீதி, காந்திபுரம்,

கோவை-12

என்ற முகவரிக்கு எழுதி இந்நூலைப் பெற்றுக் கொள் வார்களாக. தபாற் செலவு வேறு.

(அம்பை)

சமயாச்சாரியார் நால்வர் சரித்திரம் என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இது தேவகோட்டை சிவ ஸ்ரீதத் புருஷ தேசிகர் அவர்களால் எழுதப் பெற்றது. நல்ல நடையில் முன்னோர் மொழி பொருளை அடிப்படையாய்க் கொண்டு மற்றொன்று விரிக்காது இந் நூல் எழுதப் பெற்றுள்ளது. நால்வர் குரு பூசை தினங்களில் சமாஜத் தால் வெளியிடப் பெற்ற தேவாரத் திருவாசகப் பதிப்பு களின் முன்பாகத்து அச்சிடப் பெற்ற நால்வர் வரலாற் றினைப் பாராயணம் செய்வது பெரும்பாலும் பழக்கமா கும். தற்போது சமாஜப் பதிப்புக்கள் கிடைப்பது அரி தாயினமையின் நன்முறையில் நால்வர் வரலாறுகள் சைவர்களுக்குக் குருபூசா தினங்களில் கிடைப்பதும் அரி தாயிற்று. அக்குறையை இந்நூல் பெரிதும் நிறைவு செய்யும் என்பதில் ஐயமில்லை. சைவர்கள் வீடுகளில் அவசியம் இருத்தற்குரிய நூலாகும். அவரவர் வீட்டுக் குழந்தைகளையும் இந்நூலை அவசியம் படிக்கச் செய்து நம் ஆசாரியப் பெருமக்களின் வரலாற்றையும் அவர்கள் பெருமைகளையும் யறிந்து ஈடுபடச் செய்ய வேண் டுவது சைவப் பெற்றோர்களின் தலையாய கடனும். வேண் டுவோர்: மு. அ. வீரப்பச் செட்டியார், ஜவுளிக் கடை, கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை என்ற முகவரிக்கு 75 காசுகள் அனுப்பி இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை 60 காசுகள். அஞ்சற் செலவு 15 காசுகள் ஆகும். கையடக்கமாய் 131 பக்கங்கள் கொண்டுள்ள சிறந்த நூலாகும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

(அம்பை)